**Minutes of the Public Hearing Meeting held on 24.09.2019 at 11.00 AM at Community Hall near Valajanagaram Panchayat Office, Ariyalur to Jayankondam Main Road, Valajanagaram Post, Ariyalur Taluk, Ariyalur District.**

Name of Project: M/s.Tamil Nadu Minerals Limited for the proposed Periyanagalur Limestone Mine over an extent of 9.94.0 Hectares with 94406 (ROM) Tonnes for the year 2019-2020 Limestone production at SF.No292/4,5&6 etc., of Periyanagalur Village, Ariyalur Taluk, Ariyalur District.

**List of Officials participated in the Meeting.**

1. Dr.T.G. Vinay, I.A.S.,
   District Collector,
   Ariyalur.

2. Thiru.T. Sehar,
   District Environmental Engineer ,
   Tamil Nadu Pollution Control Board,
   Ariyalur District.

**List of Participants related to the project :**

1. Thiru.E.Ganesan,
   Deputy Manager (Mines),
   M/s.Tamil Nadu Minerals Limited,
   Chennai – 600 05.

2. Thiru.G..Vijayakumar,
   Deputy Manager (Mines),
   M/s.Tamil Nadu Minerals Limited,
   Chennai – 600 05.

3. Thiru.M.Manokaran,
   Divisional Manager (Mines),
   M/s.Tamil Nadu Minerals Limited,
   Trichy

**Totally 171 members were participated including Government Officers, Project proponent and general public. (Enclosure vide Annexure - A).**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ariyalur District welcomed the District Collector, M/s.Tamil Nadu Minerals Limited, Management, Press & General Public for the Public Hearing Meeting.

He informed that as per Ministry of Environmental & Forest, New Delhi vide EIA Notification dated: 14.09.2006, for certain type of projects public opinion has to be obtained before the issue of Environmental Clearance. This Public hearing is conducted for M/s.Tamil Nadu Minerals Limited for the proposed Periyanagalur Limestone Mine over an extent of 9.94.0 Hectares with 94406 (ROM) Tonnes Limestone production for the year 2019-2020 at SF.No292/4,5&6 etc., of Periyanagalur Village, Ariyalur Taluk, Ariyalur District.

He also informed that the views of the public will be recorded and it will be forwarded to State Environmental Impact Assessment Authority, Chennai after getting approval from the District Collector.

The District Collector requested the Project Proponent to explain about the project and later that the public can give their opinion and seek clarification on any doubts about the project.

**Thiru. Mohamad Hussain, Project consultant of M/s Wolkam India Limited, Rajasthan made the presentation about the project on behalf of M/s Tamil Nadu Minerals Limited.**

The District Collector informed the public to give their opinion about the project one by one.

1. Thiru. Veeramurasu, Kattuprinkiyam :

He welcomed all the people participated in the Public hearing Meeting.
His house is located near to the mining area. Two lakes are located near the mining area such as padayachi eri and muniyanar eri. He requested to fill the both eri with the water stagnated in the mining area. He stated that M/s TamilNadu Minerals limited had

provided large number of employment to their village people thereby got benefited. And during operation of the mines, job opportunity to be given to their village people.

He further stated that M/s TamilNadu Minerals limited has informed that they were spending 2% of the profit for the development of village, before spending the amount suggestion from the local people to be obtained.

He welcomed the mining project.

**Mr. E. Ganesan, Deputy Manager(Mines), M/s.Tamilnadu Minerals Limited Chennai** stated that they were previously giving water for Padayachi eri. During operation of the mines they will supply water to the water bodies and also would consider providing jobs for the local people.

**2. Thiru. K.Murugaiyan, Palakkarai Kattuprinkiyam.**

During inception of the mine at 1978 about 80 peoples got employment and benefited. Most of them retired from the job. So while starting the mines job opportunity is to be given to their village people. The two eris has to be filled with mine water from the mining area.

He welcomed the mining project.

**Mr. E.Ganesan, Deputy Manager (Mines) M/s Tamilnadu Minerals Limited, Chennai**

He stated that during operation of the mines they will consider job for the local people.

**3. Tmt.Saroja, Kattuprinkiyam.**

She requested that while starting the mine job opportunity to be given to their village people. Further, stated that water has to be provided to the Eri and no objection for the mining project.

**4. Tmt.Amutha, Kattuprinkiyam.**

She stated that the cattle and public benefitted with mine water and requested that while starting the mining activity job opportunity has to be given to their village people and added that no objection for the mining project.

5. Thiru.Elavarasan, Thamaraikulam.

In Ariyalur – Jayakondam Road thousands of people died due to lorries belonging to cement industries. He further stated that the 2% of the profit has to be issued for died person as compensation.

Further he added, Native tree species shall be planted. The trees are being planted on elevated areas. Separate area shall be provided for cattle herding. Several persons are suffering suffered from lung diseases. Expired limestone mines shall be closed.

De-silting of eri vaikall has to be carried out. Private cement industries have dumped the soil from mines as mountain due to that all the vaikkal and eri were blocked so all dumps have to be removed.

He objected for mining activity.

**Mr. E.Ganesan, Deputy Manager (Mines) M/s. Tamilnadu Minerals Limited Chennai**

He stated that in Ariyalur- Jayakondam Road no casualty due to Ms. Tamil Nadu Minerals Limited. With the consultation of TNPCB, Agriculture and Forest Department trees will be planted in appropriate area.

No blasting carried out in the mining area. Rock breaker is used for mining activity which does not generate noise.

6. Thiru. R.Shankar, Ariyalur, State President, Legal awareness and anti corruption society.

1. He stated that last month Arima Sangam conducted Eye Camp, in that Camp nearly 297 public were participated and benefited from eye vision problem.
2. The Cement factories functioning in Ariyalur District has not given Job opportunities to the unemployed youth till date.
3. In Ariyalur District, the agriculture cultivation of maize, coriander and cotton were in large scale. However, due to drought situation agriculture lands have become desert. Funds allotted for Corporate Social Responsibility has to be utilized for the farmers who lost their livelihood in agriculture.
4. Further he added that public who were assembled for the public hearing

meeting were unaware of the reason for public hearing being conducted and requested to make arrangements for the livelihood of innocent people.

And requested the District Collector, to organize again a meeting at the Collectorate so as to take necessary decision on the above mentioned points.

He objected for Mining activity.

**7. Thiru. Parrivallal, Kattupringiyam**

He stated that new job opportunity has to be given to the local village people and added that no objection for the mining project.

Meeting has been concluded with the vote of thanks.

**Encl. :** 1. Attendance sheet for the participants.

2. Video (CD) of the Public Hearing.

**District Environment Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Ariyalur.**

**District Collector,**
**Ariyalur.**

24.09.2019 அன்று காலை 11.00 மணிக்கு, வாலாஜாநகரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் உள்ள சமுதாய கூடத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அறிக்கை.

திட்டத்தின் பெயர்: தி/ள்.தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் பெரியநாகலூர் சுண்ணாம்புக்கல் சுரங்கம் விஸ்தீரணம் - 9.94.0 ஹெக்டேர் உற்பத்தித்திறன் 2019-2020-ஆம் ஆண்டிற்கு 94406 டன்கள், சுண்ணாம்புக்கல் (ROM), புல எண். 292/4,5&6, etc., பெரியநாகலூர் கிராமம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள்:

1. டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,
   மாவட்ட ஆட்சித்தலைவர்,
   அரியலூர் மாவட்டம்.

2. திரு.த.சேகர்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   அரியலூர் மாவட்டம்.

திட்டத்தின் சார்பாக கலந்து கொண்டவர்கள்:

1. திரு. ஈ. கணேசன்,
   துணை மேலாளர் (சுரங்கம்),
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   சென்னை – 600 005.

2. திரு. க. விஜய குமார்,
   துணை மேலாளர் (சுரங்கம்),
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   சென்னை – 600 005.

3. திரு. ம. மனோகரன்,
   கோட்ட மேலாளர் (சுரங்கம்),
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   சென்னை – 600 005.

கருத்து கேட்புக் கூட்டத்தில் அரசு அலுவலர்கள், நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் உட்பட 171 நபர்கள் கலந்து கொண்டார்கள் (இணைப்பு – A).

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரியலூர் அவர்கள் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தினால் தொடங்கப்பட உள்ள பெரியநாகலூர் சுண்ணாம்புக்கல் சுரங்கத்தின் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்து இருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் அலுவலர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரை வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், புது தில்லி, 14.09.2006 அன்று வெளியிட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் படி சுற்றுச்சூழல் அனுமதி வழங்குமுன் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் அவசியமானது என்பதால் தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சுண்ணாம்புக்கல் சுரங்கம் பெரியநாகலூர் கிராமம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டத்தில் 9.94.5 ஹெக்டேர் பரப்பில் சுண்ணாம்புக்கல் எடுப்பதற்கு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறுவதாகவும், நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தை பற்றி விவரித்த பின் பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம், சென்னைக்கு அனுப்பி வைக்கப்படும் என கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் விளக்க அறிக்கையினை விளக்கிய பின் பொதுமக்கள் தங்களுக்குள்ள சந்தேகங்கள் மற்றும் தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சுற்றுச்சுழல் அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகரான திரு.முகமது அசைன் தி/ள். வோல்கெம் இந்தியா லிமிடெட், இராஜஸ்த்தான் அவர்கள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம் தொடர்பான அறிக்கையை விளக்கி கூறினார்.

பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கள்:

1. திரு. வீரமுரசு, காட்டுப்பிரிங்கியம்.

பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்து வரவேற்றார்.

அவரது வீடு சுரங்கத்திற்கு அருகாமையில் உள்ளது. சுரங்கத்திற்கு அருகில் படையாச்சி ஏரி மற்றும் முனியனார் ஏரி ஆகிய இரண்டு ஏரிகள் உள்ளன. தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது வேலை வாய்ப்பு கொடுத்தார்கள். மிக அதிகம் நபர்கள் பயன் அடைந்தனர். தற்பொழுது சுரங்கப் பணி துவங்கும்பொழுது அவர்கள் பகுதியை சேர்ந்தவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இரண்டு ஏரிகளுக்கும் சுரங்கத்தில் உள்ள தண்ணீரினை வழங்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சிதலைவரிடம் கோரிக்கை வைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும் சுரங்கத்தில் கிடைக்கும் இலாபத்தில் இரண்டு சதவீதத்தை கிராமத்திற்கு ஒதுக்குவதாக கூறினார்கள். அவ்வாறெனில் கிராம மக்களை கேட்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

**துணை மேலாளர் (சுரங்கம்), தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை அவர்களின் பதிலுரை.**

ஏற்கனவே சுரங்க பணி நடைபெற்ற போது சுரங்கத்திலிருந்து படையாச்சி ஏரிக்கு தண்ணீர் வழங்கப்பட்டது. சுரங்கப்பணி நடக்கும் போது தண்ணீர் ஏரிக்கு அனுப்பப்படும்.

2. திரு.கே.முருகையன், பாலக்கரை காட்டுப்பிரிங்கியம்.

1978-ல் சுரங்கம் துவங்கியபொழுது சுமார் 80 நபர்கள் பயனடைந்தனர். அவர்களில் பலர் பணி ஓய்வு பெற்றுவிட்டனர். எனவே, தற்பொழுது சுரங்கப்பணிகள் துவங்கியவுடன் அவரது பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூறினார். மேலும், இரண்டு ஏரிகளுக்கும் சுரங்கத்தில் உள்ள தண்ணீரை வழங்க வேண்டும். தமிழ்நாடு கனிம நிறுவனம் சுரங்க பணிகள் துவக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

துணை மேலாளர் (சுரங்கம்), தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை அவர்களின் பதிலுரை.

சுரங்கப்பணிகள் துவங்கியவுடன் அப்பகுதி மக்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று கூறினார்.

3. திருமதி. சரோஜா, காட்டுப்பிரிங்கியம்

சுரங்கப்பணிகள் துவங்கியவுடன் தங்களது பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஏரிகளுக்கு தண்ணீர்வழங்க வேண்டும். தமிழ்நாடு கனிம நிறுவனம் சுரங்க பணிகள் துவக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

4. திருமதி. அமுதா, காட்டுப்பிரிங்கியம்

சுரங்கத்திலிருந்து கிடைக்கும் நீரினால் ஆடு, மாடுகள், மக்கள் பயனடைகிறார்கள். தற்பொழுது சுரங்கப்பணிகள் துவங்கியவுடன் தங்கள் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

5. திரு. இளவரசன், தாமரைக்குளம்

அரியலூர் - ஜெயங்கொண்டம் சாலையில் சிமெண்ட் ஆலை நிர்வாகம் இயக்கும் லாரிகளினால் இதுவரையில் ஆயிரக்கனக்கான உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், சென்னையில் பிளக்ஸ் பேனர் விழுந்து ஒரு பெண் பொறியாளர் இறந்ததற்கு பெரிய அளவில் பேசப்பட்டது. சுற்றுச்சூழல் அறிக்கையில் இலாபத்தில் இரண்டு சதவீதம் நலத்திட்டத்திற்கு செலவிடப்படும் என்று கூறினார்கள். மேற்படி தொகையிலிருந்து இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கவேண்டும்.

அவர் நுரையீரல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார். பாரம்பரிய மரக் கன்றுகளை நட வேண்டும். மேட்டுப்பகுதியில் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. அவை வளருமா என்று தெரியவில்லை. ஆடு மாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்க வேண்டும்.

நூற்றுக்கு மேற்பட்ட சுரங்கங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று கூட முறையாக மூடப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும், மாதமும் சுரங்கத்திற்காக கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடந்து கொண்டு வருகின்றன. பயன்பட்ட சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் மூடப்படவேண்டும். பின் புதிய சுரங்கங்கள் அமைக்க அனுமதிக்க வேண்டும். ஓடைகள், வாய்க்கால்கள் தூர் வார வேண்டும். தனியார் சிமெண்ட் நிறுவனங்கள் சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட மண்களை மலை போல்குவித்து வைத்துள்ளதால் வாய்க்கால்களில் அடைப்பு ஏற்படுகிறது. எனவே, மண் குவியல்கள் களைய வேண்டும்.

துணை மேலாளர் (சுரங்கம்), தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை அவர்களின் பதிலுரை.

அரியலூர் - ஜெயங்கொண்டம் சாலையில் இதுவரையில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தினால் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை.

தமிழ்நாடு வேளாண்மைத் துறை மற்றும் வனத்துரையின் அறிவுறையை பெற்று உரிய மரக்கன்றுகள், தகுந்த இடங்களில் வைக்கப்பட்டு வருகிறது. 400 மரங்கள் நடப்பட்டுள்ளன.

சுரங்கத்தில் வெடி வைப்பதே கிடையாது. ராக் பிரேக்கர் வாயிலாக உடைக்கப்படுகிறது. எனவே, அதிக சப்தமும் ஏற்படுவதில்லை என்று கூறினார்.

**6. திரு. R. சங்கர், அரியலூர். மாநிலத்தலைவர், சட்ட விழிப்புணர்வு மற்றும் ஊழல் தடுப்பு இயக்கம் மற்றும் அரிமா சங்க தலைவர்**

(1) அரிமா சங்கத்தின் சார்பாக சென்ற மாதம் நடைபெற்ற இலவச கண் அறுவை சிகிச்சை முகாமின் வாயிலாக சுமார் 297 நபர்கள் கண்பார்வை பெற்றுள்ளனர்.

(2) இதுவரையில் அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் 1000-க்கும் மேற்பட்ட நபர்கள் வேலை செய்த நிலையில் தற்பொழுது 100 நபர்கள் மட்டுமே வேலை செய்து வருகின்றனர்.

(3) அரியலூர் என்றால் மல்லி, மக்காசோளம், பருத்தி ஆகியவைகள் அதிகம் விளையக்கூடியவை ஆகும். ஆனால், மிகுந்த வறட்சியின் காரணமாக அரியலூர் பகுதி சுடுகாடாக காட்சியளிக்கிறது. CSR பணத்தை விவசாயத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு ஒதுக்க வேண்டும்.

(4) ஒன்று அறியாத அரியலூர் மாவட்ட மக்கள் எதற்காக இங்கு வந்திருக்கின்றோம் என்பதே அவர்களுக்கு தெரியாது. இந்த அப்பாவி மக்களுக்கு உரிய வாழ்வாதாரத்தை வழங்கவேண்டும்.

எனவே, மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆட்சியர் அலுவலகத்தில் மீண்டும் ஒரு கூட்டம் போட்டு உரிய முடிவினை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சுண்ணாம்புக்கல் சுரங்கம் வேண்டாம் என்று கூறினார்.

7.திரு.பாரிவள்ளல், காட்டுப்பிரிங்கியம்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தினால் 40 ஆண்டுகளில் எந்த ஒரு விபத்தும் ஏற்படடதில்லை. அரை ஏக்கர் நிலம் கொடுத்தவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டது. உள்ளூர் மக்களுக்க வேலை வாய்ப்புகள் வழங்க வேண்டும். மேலும், தமிழ்நாடு கனிம நிறுவனம் சுரங்கப் பணிகள் மேற்கொள்வதால் இதுவரை ஒரு பாதிப்பும் ஏற்பட்டது இல்லை.

நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

இணைப்பு:
1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு (A)
2. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கையை பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
அரியலூர்

மாவட்ட ஆட்சித்தலைவர்
அரியலூர்

2/6